# உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பங்களிப்புத் தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதியினை நிதியப் புத்தகங்களுடன் இணக்கம் செய்கையில் 220 உள்ளூராட்சி நிறுவகங்களிடம் இருந்து பெறவேண்டிய மீதி ரூபா 80,406,574 ஆல் அதிகமாகவும் 72 உள்ளூராட்சி நிறுவகங்களிடம் இருந்து பெற வேண்டிய மீதி ரூபா 87,718,689 ஆல் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் ஒட்டு மொத்த ஓய்வூதியச் செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஓய்வூதியத் திணைக்களத்தின் கணனி தரவு முறைமையின் செலவின வகைப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதியத்தின் ஒட்டு மொத்த ஓய்வூதியச் செலவினம் ரூபா 689,425,595 ஆக இருந்தது.

### 1.2.2 விளக்கமளிக்கப்பட்டிராத வேறுபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய நிறுவக பங்களிப்புப் பணப்பெறுவனவு காசேட்டின் பிரகாரம் ரூபா 62,767,930 மீதியாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பங்களிப்புப் பணப் பெறுவனவுப்பட்டோலையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 62,781,075 ஆனமையால் வேறுபாடு ரூபா 13,145 ஆக இருந்தது.

### 1.2.3 தொங்கல் கணக்குகள்

பங்களிப்புப் பண சீராக்கற் கணக்கில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,145,484 தொகை தீர்க்கப்படாத மீதியாகும்.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1998 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிற்குரிய ரூபா 793,241 தொகையான மதிப்பிழந்த காசோலைகளுக்காக பணம் பெறப்படுவதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | பெற வேண்டிய நிறுவக பங்களிப்புத் தொகை | 1,542,364,020 | (i) | காலரீதியான பட்டோலைகள். |
| | | | (ii) | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிறுவகப் பங்களிப்புக்கள் | 62,767,930 | (i) | காலரீதியான பட்டோலைகள் |
| | | | (ii) | பங்களிப்புத் தொகை தொடர்பான அறிவித்தல். |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 143 (3) (ஆ) | வைப்பில் இடப்பட்டிருந்தும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தேறாத வைப்புக்கள் ரூபா 65,138 தொகை காணப்பட்டதுடன் அவைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| i. 4.1 (அ) ஆம் பந்தி | மீளாய்வாண்டின் பாதீடு விடயப் பொறுப்பு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 4.3 (இ) ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2010 திசெம்பர் 13 ஆம் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 2(IV) ஆம் பந்தி | நிதியத்தின் மாதாந்த செலவினம் தொடர்பான ஒன்றிணைந்த அறிக்கை மாவட்ட செயலகங்களிலிருந்து ஓய்வூதியத் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 54,478,480 ஆன மிகையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 56,901,123 ஆக இருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 2,422,643 ஆன வீழ்ச்சியினைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டின் கிடைக்க வேண்டிய நிறுவக பங்களிப்பு பணம் ரூபா 122,978,480 ஆக இருந்ததுடன் அதற்குரித்தாக கிடைத்திருந்த ரூபா 62,781,075 தொகை நிதியத்தின் ஓய்வூதியம் செலுத்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட பங்களிப்பு பணத்தில் நிதியத்திற்கு கிடைக்கப் பெறாத அளவான ரூபா 60,197,405 தொகையானது ஓய்வூதியத் திணைக்கள செலவினத் தலைப்பிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அது செலவினமொன்றாக உரிய பிரகாரம் கணக்கு வைக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 54,478,480 தொகையான மிகையொன்று தோற்றம் பெறுவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

தேசிய அரசாங்க சபையின் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிதியத்தின் கட்டுப்பாடு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் வசம் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தும் அதிகாரச் சட்டத்தின் கட்டளைகளுக்கு முரணாக 2010 திசெம்பர் 13 ஆந் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிருபத்தின் மூலம் மாதாந்த சம்பளப் பட்டியல் தயாரித்தல் மற்றும் கோவையின் பொறுப்பளி தன்மை என்பன 2011 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் பிரதேச செயலாளருக்கு பன்முகப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பங்களிப்புப் பண முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிச்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிடைக்க வேண்டிய மொத்த நிலுவையான நிறுவக பங்களிப்புப் பணம் ரூபா 1,542,364,020 ஆனதுடன் இதில் 56.02% , 15.14% மற்றும் 28.84% முறையே மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் இருந்து பெறப்பட வேண்டியதாக இருந்தன.

(ஆ) மீளாவாண்டில் நகர சபைகளுக்குரிய பங்களிப்புப் பணம் ரூபா 15,511,996 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிலுவைப் பணமும் சேர்ந்து ரூபா 18,933,532 தொகை கிடைத்திருந்தது. மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளில் மீளாய்வாண்டிற்கு உரித்தான பெற வேண்டிய நிறுவனக பங்களிப்புப் பணம் மற்றும் நிலுவைப் பணம் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

| உள்ளூராட்சி நிறுவன வகை | மீளாய்வாண்டிற்குரிய பங்களிப்புப் பணம் | மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த பங்களிப்புப் பணம் | மீளாய்வாண்டிற்காக பெறவெண்டிய பங்களிப்புப் பண நிலுவை | நிலுவைப் பங்களிப்புப் பணம்ஆண்டிற்கான பங்களிப்புப் பணத்தின் % ஆக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மாநகர சபைகள் | 82,575,769 | 27,552,734 | 55,023,035 | 66.6 |
| பிரதேச சபைகள் | 24,890,715 | 16,294,809 | 8,595,906 | 34.53 |
| மொத்தம் | 107,466,484 | 43,847,543 | 63,618,941 | |

(இ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் எவ்வித பங்களிப்புப் பணமும் செலுத்தப்பட்டிராத பிரதேச சபைகளின் எண்ணிக்கைகள் ஒவ்வொரு மாவட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அந்நிறுவகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நிறுவகப் பங்களிப்புத் தொகை ரூபா 15,802,249 ஆக இருந்தது.

| மாவட்டம் | பிரதேச சபைகளின் எண்ணிக்கை | மீளாய்வாண்டில் எவ்வித நிறுவகப் பங்களிப்புகளும் செலுத்தியிருக்காத நிறுவகங்களின் எண்ணிக்கை | மொத்த நிறுவகங்களின் சதவீதமாக செலுத்தப்பட்டிராத நிறுவன எண்ணிக்கை % |
|---|---|---|---|
| குருநாகல் | 17 | 17 | 100 |
| பொலன்னறுவை | 06 | 02 | 33 |
| புத்தளம் | 09 | 09 | 100 |
| பதுளை | 14 | 07 | 50 |
| அனுராதபுரம் | 18 | 17 | 94 |
| மன்னார் | 04 | 03 | 75 |
| இரத்தினபுரி | 13 | 06 | 46 |
| கேகாலை | 10 | 02 | 20 |
| மொனறாகலை | 10 | 05 | 50 |
| அம்பாறை | 13 | 10 | 77 |
| திருகோணமலை | 09 | 08 | 89 |
| வவுனியா | 04 | 01 | 25 |
| நுவரெலியா | 05 | 04 | 80 |
| கண்டி | 17 | 10 | 59 |
| யாழ்ப்பாணம் | 12 | 06 | 50 |
| மட்டக்களப்பு | 10 | 09 | 90 |
| மாத்தளை | 10 | 07 | 70 |
| ஹம்பாந்தோட்டை | 09 | 06 | 67 |
| முல்லைத்தீவு | 03 | 03 | 100 |
| களுத்துறை | 10 | 03 | 30 |
| மாத்தறை | 12 | 10 | 83 |
| கிளிநொச்சி | 03 | 01 | 33 |
| காலி | 15 | 15 | 100 |
| | 233 | 161 | |

மேலுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் பங்களிப்புப் பணத்தினை சேகரிப்பது தொடர்பாக நிதியம் போதியளவான செயற்திறனை காண்பித்திருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) கிடைக்க வேண்டிய நிலுவைப் பங்களிப்புப் பணம்